செ. கு. எண்: 080 நாள்: 10.08.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்**

**அறிக்கை – 10.8.2019**

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை கால்வாய்கள் மற்றும் காலிங்கராயன் வாய்கால் மற்றும் கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் இரட்டைப் படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகளின் கீழ் பாசனம் பெறும் நிலங்களின் முதல் போக நன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை கால்வாய்கள் மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு 11.08.2019 முதல் 08.12.2019 வரையும் – கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் இரட்டைப் படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகளின் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு 16.08.2019 முதல் 11.12.2019 முடிய தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானி, பெருந்துறை, ஈரோடு, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்கள் திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் வட்டம் மற்றும் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி வட்டம் ஆகியவற்றில் உள்ள 1,43,747 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**